PlanetRead

Literacy for a Billion

Movie: Chinnavar
Year: 1992

Song: Kuthaalang giri giri
Lyricist: Gangai Amaran

உட்டாலங்கிரிகிரி மாமா
நீ எட்டாத எட்டு வக்கலாமா
உட்டாலங்கிரிகிரி மாமா
நீ எட்டாத எட்டு வக்கலாமா
குத்தாலம் போய் வரலாமா
அங்கு கொண்டாட்டம்
போட்டு வரலாமா
கன்னி பொண்ணு நான்தானே
உன்னை எண்ணி ஆளானேன்
கன்னி பொண்ணு நான்தானே
உன்னை எண்ணி ஆளானேன்
அட வா மாமா வா மாமா
உட்டாலங்கிரிகிரி பாமா
நீ எட்டாத எட்டு வக்கலாமா
கிட்டாத பழத்துக்கு வீணே
ஒரு கொட்டாவி
என்னத்துக்கு மானே
ஆளான பொண்ணுக்கும்
நாளான பொண்ணுக்கும்
மாறாது உள்ள மவுசு
தானாக வந்ததை
வேணான்னு சொல்வது
கூடாது இந்த பவுசு
எட்டாத கொம்புல
தேன்கூடு கட்டுது
கிட்டாது எட்டி எடுக்க
இப்போது நிம்மதி
என்னோடு உள்ளது
கூடாது தட்டி பறிக்க
அப்பாவி பொண்ணு இது மாமா
தப்பாக என்னை எண்ணலாமா
இப்போது கிட்ட வந்து வீணா
வித்தாரம் பண்ண எண்ணலாமா
அட ஓ மாமா ஓ மாமா
உட்டாலங்கிரிகிரி பாமா
நீ எட்டாத எட்டு வக்கலாமா
ஹோய்
குத்தாலம் போய் வரலாமா
அங்கு கொண்டாட்டம்
போட்டு வரலாமா
தேடாத சொந்தமும்
கூடாத பந்தமும்
தானாக வந்தது என்ன
காடான நெஞ்சில
பூந்தோட்டம் பூத்தது
பூவாசம் போனது என்ன
தானா விதச்சது
சீரா மொளச்சுது
நான் என்ன செய்ய அதுக்கு
தானே படிச்சது
தேடி முடிச்சது
நாம் என்ன சொல்ல இருக்கு
ஆகாது ஏழைக்கொரு ஆசை
நான் வெறுங் கல்லு
என்னத்துக்கு பூசை
மாறாது என்னுடைய ஆசை
நீ மறுக்காம வந்திடணும் தீர்க்க
அது நீதானே என் மானே
உட்டாலங்கிரிகிரி மாமா
நீ எட்டாத எட்டு வக்கலாமா
ஹோய்
கிட்டாத பழத்துக்கு வீணே
ஒரு கொட்டாவி
என்னத்துக்கு மானே
கன்னி பொண்ணு நான்தானே
உன்னை எண்ணி ஆளானேன்
ஏழைக்கிது ஆகாது
ஏமாத்துனா தாங்காது
அட வா மாமா வா மாமா
உட்டாலங்கிரிகிரி பாமா

*PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.*

நீ எட்டாத எட்டு வக்கலாமா
குத்தாலம் போய் வரலாமா

அங்கு கொண்டாட்டம்
போட்டு வரலாமா

*Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.*

*PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.*